G.C.E. (A|L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி:
4-5 MECHANICS
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

DAY CLASS
A/L PHYSICS
★ MECHANICS ★
ஆரம்பம் - 1-12-86
திங்கள் காலை 7-30 மணி
MON - FRI - 7-30 A.M.
by
SATHTHIYASEELAN
NEW MASTER
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ கார்த்திகை மீ 15 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 28 (01-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-4

## இந்தியாவினது முறையான பதில் ஒரு வார காலத்தில்

கொழும்பு, டிசம்பர் 1

கடந்த ஞாயிறு இரவு கொழும்பு திரும்பிய இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் நேற்றுக் காலை ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் நீடித்தன.

இலங்கை தனது தூதர் பேர்னட் திலகரத்தின மூலம் புதுடில்லி அனுப்பிய பதில்கள் குறித்து இந்தியா எடுத்துள்ள பூர்வாங்க நிலைப்பாட்டை திரு. டிக்ஸிற் ஜனாதிபதிக்கு விளக்கிச் சொன்னார்.

இலங்கையின் பிந்திய நிலை குறித்த இந்தியாவின் விரிவானதும் முறையானதுமான பதில் ஒரு வாரத்துக்குள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் திரு டிக்ஸிற் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினார்.

இலங்கையின் பதில்கள் தமிழ்ப் போராளிக்குழுக்களிடம் கையளித்து பேச்சுக்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

டிக்ஸிற் சொல்கிறார்:

## இந்தியா தனது சொந்த யோசனையை முன் வைக்கவில்லை

கொழும்பு, டிச. 1

தமிழரின் அபிலாஷைகளை இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்துவதும் அதுபற்றி விளக்குவதும் தான் இந்தியா ஆற்றிவரும் பங்கு ஆகும்.

ஆகவே இந்திய அரசின் யோசனைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இப்படி இந்தியத் தூதர் ஜே. என்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இணை அமைச்சர் குழு நாளை சென்னையில்

புதுடில்லி, டிசம்பர் 1

இலங்கையின் பதில்கள் குறித்து தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்த இணை அமைச்சர்கள் நட்வர்சிங், ப. சிதம்பரம் ஆகியோர் நாளை (செவ்வாய்) சென்னை செல்கின்றனர்.

இலங்கை நிலை குறித்து இணை அமைச்சர் குழு தமிழ்ப் போராளிகளுக்கு விளக்கிச் சொல்லும். தமிழ்ப் போராளிக் குழுக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள இச் சந்திப்பை இணை அமைச்சர் குழு பயன்படுத்தும். (அ-எ)

## போராளிகளுடன் பேசிய பின்னரே கொழும்பு வருவது தெரியும்

புதுடில்லி, டிச. 1

இணை அமைச்சர் குழுவை கொழும்புக்கு அனுப்புவதா? அப்படியானல் எப்போது அனுப்புவது?

இதுபற்றி இணை அமைச்சர் குழு — போராளிகள் சந்திப்பின் பின்னரே இந்திய அரசு முடிவு செய்யும்.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் இலங்கையின் பதிலை இந்திய அரசின் அதிகாரிகள் தீவிர பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கைத் தூதர் பேர்னட் திலகரத்தின புதுடில்லி அடைந்ததும் இணை அமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம் ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

இச் சந்திப்பு ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது.

தூதர் திலகரத்தின இலங்கை நிலைப்பாட்டை இணை அமைச்சர்களுக்கு விளக்கினார். (அ-எ)

ஜே. ஆர். சொல்கிறார்:

## வரவேற்றுப் பேச எந்நேரமும் தயார்!

கொழும்பு, டிச. 1

இணை அமைச்சர் குழுவை எந்த நேரமும் வரவேற்றுப் பேசத் தயாராக இருக்கின்றேன்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, நேற்று தன்னைச் சந்தித்த இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றிடம் தெரிவித்தார்.

''இணை அமைச்சர்கள் கொண்டுவரும் யோசனைகளையும் பரிசிலிக்கத் தயாராக இருக்கின்றேன்'' — என்றும் அப்போது திரு. ஜெயவர்த்தன வலியுறுத்தினார். (அ-எ)

### இடைவெளி! மீண்டும் பெரு இடைவெளி!!

# இந்தியா எதிர்பார்த்தபடி அரசின் பதில்கள் இல்லை

## அதிருப்தி குறித்து அறிவிப்பு

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, டிசம்பர் 1

இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் ஆகக் கடைசியாக அனுப்பிய பதில்களுக்கும் தமிழர் அபிலாஷைகளுக்கும் இடையில் பெரும் இடைவெளி இருக்கின்றது.

அதாவது தமிழர் அபிலாஷைகள் என்று இந்தியா கருதும் அளவுக்குத்தானும் இலங்கைப் பதில்கள் அமையவில்லை.

இவ்வாறு இந்திய அரசு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது. அந்த அபிப்பிராயம் நேற்று இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றினல், ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தமிழ்ப் போராளிகளின் தமிழீழம் கோரிக்கைக்கும் இலங்கை அரசின் மாகாணசபை அதிகாரப் பகிர்வு யோசனைகளுக்கும் இடையேயான சில கருத்துக்களை முன் வைத்தே கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்த இந்திய இணை அமைச்சர் குழு ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியது.

தாயகம் குறித்து தமிழர் கொண்டுள்ள உணர்ச்சி பூர்வ நிலையை இணை அமைச்சர் குழு, ஜனாதிபதிக்கு எடுத்துச் சொன்னது.

* வடக்கு - கிழக்கு இணைப்பு; அல்லது
* வடக்குடன், கிழக்கில் அமைக்கப்படும் தமிழர் மாகாணத்தை இணைக்க திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பகுதிகளை அடக்கிய இணைப்புப்பாதை (Corridor) ஒன்றை அமைத்தல்; அல்லது
* இரண்டு தமிழர் மாகாணசபைகளுக்கும் பொதுவாக ஒரு முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவை ஒன்றை அமைத்து நிர்வாக இணைப்பை உருவாக்குதல்.

திரு. பேர்னட் திலகரத்தின மூலம் புதுடில்லிக்கு கடந்த வியாழக்கிழமை அனுப்பிய பதிலில் இந்த மூன்று அம்சங்களையும் இலங்கை அரசு புறக்கணித்துள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ்ப்பாணத்தில் நேற்றும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மூன்று மணி அளவில் கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டு கொட்டடிப் பகுதியில் விழுந்து வெடித்தது,

எனிலும் பாரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை. (உ - 10)

### சுபநேரம்

01—12—1986

திங்கட்கிழமை

சுபநேரம்:

12.14 முதல் 1.44 வரை

ராகுகாலம்:

7.44 முதல் 9.14 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமாவாசை விரதம்

புலிகள் நடத்தினர்:

# சிங்களக் குடியேற்றத்தில் கண்ணிவெடித் தாக்குதல்

## 4 சிப்பாய்கள் பலி; ஜீப் சேதம்

யாழ்ப்பாணம், டிச. 1

மூதூர்ப்பகுதியில் தெகிவத்தை, அலிஓளுவ இராணுவ முகாம்களுக்கிடையில் சனிக்கிழமை ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீது சிங்களக் குடியேற்ற கிராமம் ஒன்றில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தினர்.

இதனல் ஜீப்வண்டி ஒன்று பலத்த சேதத்திற்குள்ளானது. 4 இராணுவச் சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

— இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கண்ணிவெடித் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சை

## ஆயிரக்கணக்கான அனுமதி அட்டைகள் யாழ் கல்விப் பகுதியில்!

யாழ்ப்பாணம், டிச. 1

இம்மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ. சி. ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் அனுமதி அட்டைகள் பல யாழ் கல்வித் திணைக்களத்தில் தேங்கியுள்ளன.

இவர்களது முகவரிகள் தெளிவாக இல்லாததாலும், காலதாமதத்தினலும் இந்த அட்டைகளை திணைக்களம் பரீட்சார்த்திகளுக்கு நேரடியாக அனுப்பிவைக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஆயிரம் தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளே இவ்வாறு திணைக்களத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், டிச. 1

அடைமழை காரணமாக கிளிநொச்சியூடான பாதைகள் யாவும் சேறும் சகதியுமாக - போக்குவரத்துச் சேவைகள் நடைபெற முடியாதநிலையில் காணப்படுகின்றன.

இதனல் தூரஇடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. (இ-10)

## தப்ப முயன்ற இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், டிச. 1

சிப்பாய்களினல் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் தப்பி ஓட முயன்றபோது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினல் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் புளியங்குளம் கண்டி வீதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

இராமசாமி கந்தசாமி (27 வயது) என்ற இளைஞரே இவ்வாறு காயமடைந்தார். (உ-10)

முச்சந்தி முனி



பேச்சுப் பேச்சென்று காலத்தை இழுத்தடிக்கிறவர் இன்னும் எத்தினை பேரை வரவேற்றுப் பேசப்போறரோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்......?

# அம்பாறை பகுதியிலும் கடும்தேடுதல்வேட்டை

அம்பாறை, டிச. 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்லாமல் அதை அண்டிய அம்பாறைப் பகுதியிலும் படையினரின் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

சம்மாந்துறையில் நடத்தப்பட்டுவரும் தேடுதல் வேட்டையின்போது சுமார் 40 இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களில் 11 பேர்சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் என்று அறியப்படுகிறது.

கல்முனையில்விரமுனைப் பகுதியிலும் நேற்று தேடுதல் வேட்டை மும்முரமாக நடைபெற்றது. (உ-14)

## கைது!

மட்டக்களப்பு, டிச. 1

மட்டக்களப்பு, கல்லடி அரச ஊழியர்களின் விடுதிகள் அமைந்திருக்கும் பகுதியில் நேற்றுக்காலை ஆயுதப்படையினர் தேடுதல் நடத்தினர்.

அரச ஊழியர் உட்பட 50 பேர் கைது செய்யப்பட்டு கல்லடி முகாமுக்கு விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்று பாண்டிருப்பில் நடத்தப்பட்ட தேடுதலில் பலர் கைதுசெய்யப்பட்டு களுவாஞ்சிக்குடி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (உ-எ-21)

## மரங்களைத் தறிக்கும் சிப்பாய்கள்!

யாழ்ப்பாணம், டிசம்பர் 1

ஒமந்தை இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள தென்னை, வாழை மரங்கள் சிப்பாய்களினல் தறித்து வீழ்த்தப்படுகின்றன.

கடந்த 27 ஆம் திகதி ஒமந்தைப் பகுதியில் தென்னந்தோட்டம் ஒன்றினுள் சென்ற சிப்பாய்கள் மீது போராளிகள் மரக் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியதை அடுத்தே இந்த நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னை, வாழை மரங்கள் உட்படப் பாரிய மரங்கள் என்பன வீதிகளில் வைத்து சிப்பாய்களினலும் அவர்களினல் கைது செய்யப்படுவோர்களினலும் தறித்து வீழ்த்தப்படுகின்றன. (உ-10)

## பீதியால் ஓடிய இளைஞர் படையினரால் சுட்டுக் கொலை

அம்பாறை, டிச 1

இராணுவம் தேடுதல் நடத்த வருவதைக் கேள்வியுற்று பீதியினல் ஓடிய அப்பாவித் தமிழ் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவம் நேற்று காரைதீவில் நடைபெற்றது.

சாப்பிட்டுக்கொண்டிருந்த அந்த இளைஞரை இராணுவம் தேடுதல் நடத்த வருவதால் அங்கிருந்து ஓடும்படி இளைஞரின் தாயார் கேட்டுக் கொண்டாராம்.

அதையடுத்து அங்கிருந்து ஓட முயன்ற அந்த இளைஞரை மறைந்திருந்த சிப்பாய்கள் சுட்டுக் கொன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-14)

## பிரதான தபாலகம் முற்றாக இடம் மாறியது

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ் பிரதான தபாலகத்தின் முழுக் கருமபீடங்களும் இரண்டாம் குறுக்குத் தெரு தபால் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களுக்குமுன்னர்கோட்டை முகாமுக்கு முன்பாக உள்ள பெரிய தபாற்கந்தோரில் இருந்து சில முக்கிய கருமபீடங்கள் இரண்டாம் குறுக்குத்தெருவுக்கு மாற்றப்பட்டன.

எனினும் ஏனைய சில கருமபீட ஊழியர்கள் பெரிய தபாற்கந்தோரிலேயே கடமையாற்றி வந்தனர்.

கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாலத்தைத் திருத்தும் முயற்சியில் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், டிச 1

மன்னாரில் கடந்த மாதம் போராளிகளினல் தகர்க்கப்பட்ட கறிச்சட்டிப் பாலத்தை திருத்தி அமைப்பதற்குச் சிப்பாய்கள் முயன்று வருகின்றனர்.

சிப்பாய்கள்-போராளி

(4ஆம் பக்கம் பார்க்க)

சிற்றி மெடிக்கல்ஸ்
யாழ்ப்பாணம்.
எமது ஸ்தாபனத்தின் மொத்த விற்பனை நிலையம்
1-12-86 முதல் தற்காலிகமாக
464, பிரதான வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்
என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.
உங்கள் சகல தேவைகட்கும் எமது புதிய விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
சிற்றி மெடிக்கல்ஸ்
464, பிரதான வீதி,
(சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24194

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# முஸ்லிம்களை தனி இனமாக கருதித் தமிழர் முன்வைக்கும் தீர்வை ஏற்போம்

## புதிய கட்சித் தலைவர் சொல்கிறார்

கொழும்பு, டிச 1

தனித்துவ அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இனமாக முஸ்லிம்களைக் கருதி தமிழர் முன்வைக்கும் தீர்வுகளை நாம் ஏற்றுக்கொள்வோம்.

இதுவரை அப்படி ஒரு தீர்வு தமிழர் சார்பில் வைக்கப்படவில்லை.

முஸ்லிம்களும் தமிழர் தான் என்ற அடிப்படையில் வைக்கும் தீர்வை கிழக்கு இலங்கை முஸ்லிம்கள் ஏற்கமாட்டார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எம். எச். எம். அஷ்ரப், காங்கிரஸின் ஆறுவது ஆண்டு மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

தமிழருக்கு எதிராகச் சிங்களவரால் பயன்படுத்தப்படும் துப்பாக்கிக் குண்டுகளாக மாற முஸ்லிம்கள் தயார் இல்லை.

அதேபோன்று சிங்களவருக்கு எதிராக தமிழர் சார்பாக இருந்து போர்க்கொடி ஏந்தவும் முஸ்லிம்கள் தயார் இல்லை.

இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்த தமிழ்த் தலைவர்களையும் போராளிகளையும் இந்தியா தூண்ட வேண்டும்.

இப்படி சட்டத்தரணி அஷ்ரப் சொன்னார். (இ-எ-14)

### சிறுகதை ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், டிச. 1

கலை இலக்கிய களத்தினர் நடத்தும் சிறுகதை ஆய்வரங்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் நடைபெறும்.

ஆய்வரங்கை திரு பொ. சிவஞானசுந்தரம் ஆரம்பித்து வைப்பார்.

நந்தியின் 'கேள்விகள் உருவாகின்றன' திரு க. பாலசுந்தரத்தின் 'உயர உயரும் அன்ரனுக்கள்' கதைகள் ஆய்விற்கு எடுக்கப்படவுள்ளன.

திரு வை நாகராஜன், திரு. க. பாலசுந்தரம், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, திருமதி கோகிலா மகேந்திரன் ஆய்வுரைகள் நிகழ்த்துவார்கள். (இ-5)

# எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்ய வேண்டும்

## தியோகுப்பிள்ளை ஆண்டகை கூறுகிறார்

இளவாலை, டிச. 1

பல அருமையான கருத்துக்கள் பரிமாறப்பட்டதைக் கேட்பது மகிழ்ச்சிக்குரியது. நெருக்கடியும் அங்கலாய்ப்பும் மலிந்த இக்காலகட்டத்தில் எமக்கு அவசிய தேவைகள் பல உண்டு. அரசையோ, பிறரையோ காத்திராது நாமே ஒரு சமூகமாகத் திரண்டு நம்தேவையை சுயமாக நிறைவு செய்து வாழ முன்வருவதே விவேகமான முடிவாகும்.

பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கண்டவாறு கூறினார்.

இளவாலை சன்னியர் மட மகாவித்தியாலயத்தில் இளவாலை வர்த்தகக் கல்லூரி மனைப் பொருளியலில் ஓராண்டு டிப்புளோமா பயிற்சி நெறி நிறைவு செய்யும் கன்னி விழாவில் சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வருகைதந்து உரையாற்றினார் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை.

ஆண்டகை தொடர்ந்து பேசும்போது:- 'சிறப்பாக வளர்ந்து வரும் இந்தக் கல்லூரி காலகட்டத்தில் இருபாலாருக்கும் உதவும் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியாக மாறவேண்டும்.

வலிகாமம் மேற்குக்கு இவ்வித கல்லூரி நிச்சயம் நிலைக்க வேண்டும்.

இது இப்பகுதி மக்களின் முன்னேற்றத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைய வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

தலைவர் திரு. யேம்ஸ் தமது உரையில், இளவாலையில் இன்று யுவதிகளின் பொன்னாள் இளவாலை சமூக உபகாரிகளின் நன்னாள் என்றார்.

கல்லூரி இயக்குநர் சபை பிரதம ஆலோசகர் திரு ஆர். எஸ். நடராசா தமது கருத்துரையில், 'பிரதம விருந்தினர் அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் ஆற்றலும் உள்ள ஈழ இனத்தின் தலைவர் என்றார்.

வர்த்தகக் கல்லூரி அதிபர் திரு. செ. இராசநாயகம் கல்லூரியின் ஆண்டறிக்கையை வாசித்தார்.

பிரதம விருந்தினர் ஆயர் சான்றிதழ்களை வழங்கினார்.

சிறப்பு சித்தி எய்தியோருக்கு பாராட்டுப் பரிசில்களும் அளிக்கப்பட்டன.

கல்லூரி சமயாசமய ஆசிரியை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி எஸ். இராமநாதன், கல்லூரிக் காப்பாளர் அருள்திரு எம். ரி. பற்றிக் அடிகள் ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

இயக்குனர் சபைச் செயலர் திரு. செ குசைஇராசா நன்றியுரை வழங்கினார். (இ-48)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### தவறிவிட்டது

ஆனைக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் நேற்று (30-11-86) எனது மூக்குக் கண்ணாடி தவறி விட்டது.

782 காரைநகர்-யாழ் மினிபஸ்ஸில் யாராவது இதனைக் கண்டிருந்தால் தயவு செய்து க. யோகராசா, அச்சகப்பகுதி, உதயன் பத்திரிகை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன்.

## கட்டுவன்புலம் ம.வியில் தளபாட பற்றுக்குறை நிலத்தில் அமரும் மாணவர்

பலாலி, டிச. 1

கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் நிலவும் மோசமான தளபாடப்பற்றுக்குறையினை விரைவாக நீக்கி உதவுமாறு யாழ் கல்விப் பணிப்பாளரை வித்தியாலய அபிவிருத்திச் சபை வேண்டியுள்ளது.

இரண்டு வகுப்புகளைச் சேர்ந்த 80 மாணவர்கள் கடந்த ஒருவருட காலமாக நிலத்தில் அமர்ந்து பாடங்களைக் கற்றுவரும் துர்ப்பாக்கிய நிலை பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மிகமோசமான தளபாடப் பற்றுக்குறையுடன் இடநெருக்கடியினையும் எதிர்கொண்டுள்ள இம்மகாவித்தியாலய மாணவர்கள் மரங்களுக்குக்கீழ் நிலத்திலிருந்து பாடம் பயில்கிறார்கள்.

இப்பாடசாலையில் 14 ஆசிரியர்களுக்குப் பற்றுக்குறை நிலவுகிறது.

மாணவர்களில் இருந்து அறவிடப்படும் வசதிச்சேவைக்கட்டணம், தற்காலிக ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க உபயோகிக்கப்படுவதால் மாணவர்களுக்கு விளையாட்டுத்துறை போன்ற ஏனைய வசதிகள் செய்து கொடுக்க முடியாது இருப்பதாகவும் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-119)

### சிப்பாய்கள் சந்தோஷம் கொண்டாடினர்

முள்ளியவளை, டிச. 1

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் இறந்தான செய்தி இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட அன்று கென்ட் பாம், டொலர் பாம் ஆகியவற்றில் உள்ள ஆயுதப்படையினர் குண்டுகளை வெடிக்க வைத்து சந்தோஷம் கொண்டாடினராம்.

அப்பகுதியில் வசித்த தமிழர்கள் பலர் அன்று இரவை பீதிகாரணமாக காடுகளில் கழித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-93)

### மக்கள் முகம்

### நியமனம்

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ் மாவட்ட சிரேஷ்ட சமூக சேவைகள் அதிகாரி திரு. அருணசலம் இராமநாதன் ஆங்கில - தமிழ், தமிழ் -ஆங்கில மொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட நீதிபதி திரு வைத்திலிங்கம் ஜெகசோதி முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை திரு இராமநாதன் சத்தியப்பிரமாணஞ் செய்து மொழி பெயர்ப்பாளரானார்.

திரு. இராமநாதன் கலட்டி, வண்ணார் பண்ணை கிழக்கு வாசி. (இ-எ)

### அகதிகளுக்கு நிதியுதவி

சாவகச்சேரி, டிச. 1

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு திருமலை சாம்பல் தீவிலிருந்து வடபகுதி வந்துள்ள சுமார் 80 குடும்பங்கட்கு அறவழிப் போராட்டக் குழுவினர் ஒரு வாரகாலத்திற்கான அரிசி, மா, பருப்பு முதலான உணவுப் பொருள்களை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினர்.

கைதடி நுணாவிலுள்ள குழுவின் பணிமனையில் வைத்து இவை வழங்கப்பட்டன.

அடுத்த வாரமும் சுமார் 80 குடும்பங்கட்கு இவ்வாறு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-31)

## மாணவர் - பெற்றோர் ஆசிரியர் ஐக்கியம் பற்றி கல்வி அதிகாரி

யாழ்ப்பாணம், டிச. 1

இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை நான் காணும்போது, இந்த விழா ஒரு கல்லூரி பரிசளிப்புவிழாபோல் அல்லாமல் ஒரு குடும்ப விழா போலவே தோன்றுகிறது. அவ்வளவுக்கு பாடசாலை அபிவிருத்திச் சபை அங்கத்தவர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும், பெற்றோர்களும் ஐக்கியமாக - ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர். இந்த சிறப்புக்கு காரணமான பாடசாலை அதிபரை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை பரிசளிப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த பிரதம கல்வி அதிகாரி திரு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் அதிபர் திருமதி. பா. சந்தசாமி தலைமையில் நடைபெற்றன.

விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வண. பிதா. பி எம். இம்மானுவல் அடிகளாரும், மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயனும் கலந்து கொண்டு பேசினார்கள்.

வண பிதா தனது உரையில், கல்விச் செல்வமே எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கக் கூடியது. அதற்காக நாம் அயராது பாடுபட்டு உழைக்க வேண்டும் என்றார்.

திரு. ச. தனஞ்செயன் தனது பேச்சில், 'பதவிக்காக மட்டும் பாடுபடாமல் பாடசாலை அபிவிருத்தி உறுப்பினர்கள் பாடசாலை வளர்ச்சிக்காக ஒற்றுமையாக உழைப்பதை இங்கு காணக்கூடியதாக உள்ளது என்றார்.

பின்னர் அவர் முன்னாள் அதிபர்களின் உருவப்படங்களை திரைநீக்கம் செய்துவைத்தார். முன்னாள் அதிபர்களின் சேவையைப் பாராட்டி திரு. எம். பேரின்பநாயகம் பேசினார்.

அவரைத் தொடர்ந்து இளைப்பாறிய முன்னாள் அதிபர் திரு. என். கணபதிப்பிள்ளை சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்.

### வன்செயல் பாதிப்பு:

## மதிப்பீட்டு வேலைகள் செயலகத்தில் துரிதம்

யாழ்ப்பாணம், டிச. 1

1983 க்குப்பின் வன்செயல்களால், இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டோர் மதிப்பீட்டுக்கான விண்ணப்பப் படிவங்களின் யாழ்மாவட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டு வேலைகள் செயலகத்தில் நடைபெற்று வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் 43 ஆயிரம் விண்ணப்பப்படிவங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து கிடைத்துள்ளன என்று திட்டமிடல் பணியகஅதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விண்ணப்பப் படிவங்களின் இறுதிக் கட்ட புள்ளிவிவர கணக்கெடுப்புக்கள் தற்போது செயலகத்தில் நடைபெற்று வருகின்றன என்றும், விண்ணப்பப் படிவங்களின் மதிப்பீட்டுக்கு யாழ்நகர கல்லூரி மாணவ, மாணவிகளும் உதவி செய்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார் (இ-5)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச 1

திரியாயில் புலிகளின் முகாம் ஒன்றை படையினர் சுற்றி வளைத்துத் தாக்க முற்பட்டபோது புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்த மோதலின் போது புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஹரன் என்ற போராளி வீரமரணமடைந்தார். அவருக்கு வீர வணக்கம் தெரிவித்து புலிகள் இயக்கம் அறிக்கை விடுத்திருக்கிறது (உ)

## பிரேத அறை சீரமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறை தற்பொழுது திருத்தப்பட்டு வருகிறது.

யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் நலன் புரிச் சங்கமே இத்திருத்த வேலைகளை மேற்கொண்டு வருகிறது.

பல காலமாக யாழ் ஆஸ்பத்திரிபிரேத அறையிலுள்ள குளிர் சாதனக் கருவிகள் பழுதடைந்த நிலையில் இருந்தன.

இதனால் பிரேத அறையில் இருக்கும் பிரேதங்கள் பழுதடைந்து அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவது வழக்கமாக இருந்தது.

எனினும் தற்போது சில பொதுஸ்தாபனங்களின் உதவியுடன் யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கம் பிரேத அறை திருத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளது (உ-10)

## இனப் பிரச்சினை பேச்சுக்களில் பிரதமர் நிலை என்ன?

கொழும்பு, டிச. 1

தற்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கும் இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் பிரதமர் பிரேமதாசாவின் நிலை என்ன?

பிரதமர் பிரேமதாசாவே நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தின்போது தனது நிலையைத் தெரிவித்தார்.

நாம் இன்னும் பேசிக்கொண்டு இருக்கிறோம். பேச்சுக்களின் பெறுபேறு என்ன என்பதைப் பொறுத்து இருந்து பார்ப்போம்.

இலங்கை அரசின் யோசனைகள் குறித்து நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

இன்னும் யோசனைகள் தயாரிக்கப்படவில்லை. யோசனைகள் தெரிந்தவுடன் நாம் எல்லோரும் கூடி ஆலோசிக்கலாம்.

இப்படி பிரதமர் சொன்னார். (இ-எ)

## தபால்நிலையஓய்வூதியம் இனி வங்கி மூலம்

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ்ப்பாணம் தபால் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் டிசம்பர் மாதத்தில் இருந்து வங்கிக்கு ஊடாக வழங்கப்பட இருக்கிறது

—இப்படி யாழ் பிரதம தபால் நிலைய அதிபர் அறிவித்து இருக்கிறார்.

வங்கிக் கணக்கை இதுவரை ஆரம்பிக்காதவர்கள் உடனடியாக வங்கிக் கணக்கை ஆரம்பித்து விட்டு கச்சேரி ஓய்வூதியக் கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி பிரதம தபால் அதிபர் தபால் நிலையம் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களைக் கேட்டிருக்கிறார். (உ-எ)


### இடம் மாற்றம்

பாதுகாப்புக் காரணமாக எமது ஸ்தாபனம் No. 87 ஸ்ரான்லி வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

கடைச்சல் கட்டைகளும் (Luvers) இதே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நாதன் மியூசிக்கல் ஸ்ரோர்ஸ்
No. 87, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
150 யார் ஆரியகுளச்சந்தியிலிருந்து அத்தியடிப் பக்கம்

### சிக்மா பம்ப்ஸ் இடம் மாற்றம்

எமது ஸ்தாபனத்தின் விற்பனை நிலையம் 28-11-86 முதல் 533, ஸ்ரான்லி வீதி (ஸ்ரான்லி வீதி, ராசாவின் தோட்டம் வீதி, சந்தி) க்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. உங்கள் 'சிக்மா பம்ப்ஸ்' தேவைகளுக்கும், திருத்துதல் சேவைகளுக்கும் (Repairs & Service) எமது புதிய விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

யுனைரெட் அக்றோ என்ஜினியரிங்
533, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22747

### பிரயாண ஒழுங்குகள்

★ லண்டன்
★ ஜேர்மனி
★ சவூதி
★ குவைத்

லண்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்பும் ஆண், பெண் இருபாலாரையும் எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதிக்கும் குவைத் கிளீனர்ஸ் ஆகவும் செல்லலாம். செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
N. BALA
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

✻ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

✻ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது

### வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள் கவனிக்க

தோலகட்டி தயாரிப்புகளுக்கு

முதலாம் திகதி டிசெம்பர் மாதம் முதல் கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளுக்கு எமது மொத்த சில்லறை வியாபாரிகளாக

ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்
பலாலி வீதி, : திருநெல்வேலி

என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வியங்காடு, கோப்பாய், இருபாலை, நல்லூர் பகுதிகளுக்கு மொத்த சில்லறை வியாபாரிகளாக

சசி கோப்பி அன் கூல்பார்
(சந்தை எதிரில்)
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு,
நல்லூர்

என்பவர்களை நியமித்துள்ளோம் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்கள் தேவைகளுக்கு அவர்களை நாடுங்கள்.

ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்,
19/3, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்

### உளவள ஆலோசனை நிலையம் வழங்கும் ஒரு திட்டம்

உங்கள் பிரச்சினைகளை நேரில் எம்மை அணுகி ஆலோசனைகள் பெறமுடியாதவர்கள் கடித மூலமும் உங்கள் பிரச்சினைகளை எழுதி அந்தரங்க ஆலோசனைகளைப் பெறலாம்.

அப்படிப் பெற விரும்பின்-
ரூபாய் 7/50 க்கு
முத்திரைகள் அனுப்பிப் பெறலாம்

அனுப்ப வேண்டிய முகவரி:-
உளவள ஆலோசனை நிலையம்
(ஆக்கப் பிரிவு)
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி, :: யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:
ஜோ. எகட்டன் செனித் ADS,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒருவன் இறைவனிடம் சரண் புகுந்தால், தவிர்க்க முடியாத விதியின் கட்டளைகளும் அகற்றப்படுகின்றன.

—அன்னை சாரதாதேவி.

உதயன்

இல.15 உஆவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

01-12-1986 த.பெ இல.23

# கைதும் காவலும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர் ஒருவருக்கு எதிராக, அரசாங்கத்தால் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு நீதிமன்றம் கலையும்வரை சிறைத்தண்டனை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

கவனிக்கில் எடுக்க முடியாத சிறு குற்றங்களுக்காகவே நீதிமன்றம் கலையும்வரை சிறைத்தண்டனை வழங்கப்படுவது வழக்கம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட பல வழக்குகளில் நீதிமன்றம் கலையும்வரையான சிறைத் தண்டனை தானும் இல்லாமல் பலர் ஏற்கனவே விடுதலையாகி இருக்கிறார்கள்.

இவை எதனைக் காட்டுகின்றன?

உரிய ஆதாரம், காரணம் இல்லாமல் தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைதுசெய்யப்பட்டார்கள்; கைது செய்யப்படுகிறார்கள். இராணுவத் தடுப்பு முகாம்களில் அவர்கள் நீண்ட காலத்துக்கு வைத்துச் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

அவர்களைக் கைதுசெய்தாயிற்றே, எப்படியோ வழக்குத் தாக்கல் செய்யவேண்டுமே என்பதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்படுகிறது. அவ்வளவுதான்!

மேற்கூறிய சம்பந்தப்பட்ட வழக்கில்—

அரசாங்கத்தால் தேடப்படுவதாகக் கூறப்பட்டவர்களைப் பற்றித் தெரிந்தும், அரசுக்குத் தகவல் கொடுக்கவில்லை என்பதற்காக எதிரிமீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஆனால், தேடப்பட்டவர்கள்மீது வழக்குத் தாக்கலாகி அவர்கள் குற்றவாளிகள் அல்லர் எனக் காணப்பட்டு ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

முறையின்படி, தேடப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதும், எதிரிமீது வழக்குத் தொடர்வதை நிறுத்தி அவரை விடுவித்திருக்கவேண்டும். தேடப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னரே எதிரிமீது வழக்குத் தாக்கல் செய்திருப்பின், உடன் வழக்கை வாபஸ் செய்து அவரையும் விடுவித்திருக்க வேண்டும்.

அரசாங்கமும், அதன் நிர்வாக இயந்திரமும் தமிழர்களை எவ்வாறு நடத்துகின்றன. அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதில் எவ்வளவு அக்கறையின்மையும், தாமதமும், இழுத்தடிப்பும் உள்ளன என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் எனக்கொள்ள வேண்டியதுதான்.

தமிழர்கள் என்றால் அவர்களை எதுவும் செய்யலாம், எப்படியும் செய்யலாம் என்ற நிலைமை இருப்பதையும் இது ஊர்ஜிதம் செய்கிறது.

இந்தவகையில் குற்றமறியா அப்பாவித் தமிழ் இளைஞர்கள் எத்தனைபேர் தடுப்பு முகாம்களிலும், சிறைகளிலும் வாடுவார்கள் என்பதை ஊகிக்கமுடியும் அல்லவா?

தடுப்புக்காவலில் உள்ளவர்கள் குறித்து விசாரணை செய்யப்படும். வழக்குத்தொடர்வதற்கு ஏற்ற ஆதாரம் உள்ளவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் மிகுதிப்பேர் விடுவிக்கப்படுவார்கள். இவ்வாறு வெலிக்கடையிலும், பூஸாவிலும் தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது அரசு வாக்குறுதி அளித்தது.

அது வெறும் வாக்குறுதியாகவே இன்னமும் இருக்கிறது. தமிழ் இளைஞர்கள் மீது விசாரணை நடத்துவதற்கும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கும் பதிலாக மேலும் பல அப்பாவிகள், தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாகக் கிழக்கில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்படுகின்றனர்.

தட்டிக் கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டம்- என்பது உண்மையே!

அர்த்தமற்ற, ஆதாரமற்ற கைதுகளையும், காவல்களையும் சட்டபூர்வமாக்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் என்று ஒன்று இருக்கும்வரை அவை தொடரவே செய்யும்.

இந்த அநியாயத்தை யாரிடம் சொல்லி முறையிடுவது? தர்மிஷ்டத்தில் நடக்கும் அதர்மத்தை அடக்குவது யார்?

# ஆப்கான் தாக்குதலை முறியடிக்க முற்றுகை

## பாக். பிரதமர் அறிவிக்கிறார்

இஸ்லாமாபாத், நவ30

ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தான் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை முறியடிக்கவும் முற்றுகையிடவும் வேண்டிய நிர்ப்பந்தம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் முகமட்கான் ஜுனேஜோ எச்சரிக்கை விடுத்தார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த இரு வாரங்களாக ரஷ்ய துருப்புக்களும் ஆப்கான் படையினரும் எமது பகுதிக்குள் திட்டமிட்ட தாக்குதல்களை அதிகரித்துள்ளனர். இவற்றைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. எனவே பதில் தாக்குதலை பாகிஸ்தானும் மேற்கொள்ள நேரிடும்.

இதுவரை காலமும் பாகிஸ்தான் அரசு பொறுமையைக் கடைப்பிடித்ததால் அதைப் பலவீனமாகக் கருதிவிடக் கூடாது.

பாகிஸ்தானுக்குள் அகதிகளாக வந்த ஆப்கான் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில்தான் இந்தத் தாக்குதல்கள் இடம்பெறுவதாயினும் அந்த அகதிகளைக் காப்பாற்றும் பாரிய கடமை பாகிஸ்தானுக்கு உண்டு.

இவ்வாறு பிரதமர் ஜுனேஜோ மேலும் தெரிவித்தார். (ஒ)

## வளரும் நாடுகளுக்கு உதவித் தீர்மானம்

வாஷிங்டன், நவ 30

வளரும் நாடுகளுக்குள்ள பல்லாயிரம் கோடி டாலர்கள் வெளிக் கடன்களை தளர்த்தி இறுதியில் ரத்துச் செய்துவிட வேண்டும்.

இதற்கான தீர்மானம் ஒன்று ஐ நா. மகா சபையில் பொருளாதாரக் குழு அங்கீகரித்துள்ளது.

இது ஐ நா. மகா சபையின் நடப்புக் கூட்டத் தொடரில் இடம் பெற்றுள்ள முக்கிய சம்பவம் எனக் கருதப்படுகிறது

குழுவின் துணைத்தலைவரான வெனிசுலா நாட்டின் ஆஸ்கார் டெரோஜாஸ் நேற்று பிரேரித்த இத்தீர்மானம் பின்னர் பொதுக் கருத்து மூலம் ஆமோதிக்கப்பட்டது.

கடன் வாங்கிய நாடுகளின் வளர்ச்சிக்காக அவற்றின் திட்டப் பணிகளில் கடன் கொடுத்த நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும். என்று அத் தீர்மானம் கோருகின்றது.

வளரும் நாடுகளின் தேசிய முதன்மைப்பணிகள் வளர்ச்சி நோக்குடன் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் அது வற்புறுத்தியது. (ஒ)

## நிதிஅமைச்சரை பதவி விலக்குக

கான்பெரா, நவ. 30

அவுஸ்திரேலிய நிதி அமைச்சரை பதவி விலகும்படி எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நிதி அமைச்சர் போல் கீஜீஸ் வருமானவரி சம்பந்தமான விவரங்களை கடந்த வருடங்களாகத் தாம் சமர்ப்பிக்கவில்லை என ஒப்புக்கொண்டதை அடுத்தே இந்த நடவடிக்கை, (ஒ)

## அரபுநாடுகள் நடவடிக்கை

கடார், நவ. 30

அரபுநாடுகள் உணவுத் தேவைக்கு பெருமளவில் வெளிநாடுகளில் தங்கியிருப்பதைக் குறைத்துக் கொள்ளவுள்ளன

அரபுநாடுகள் தற்சமயம் உணவுத்தேவையில் 75வீதம் இறக்குமதியையே நம்பியுள்ளன.

18 கோடி மக்களின் உணவுத் தேவையை இந்த நாடுகள் பூர்த்தி செய்யவேண்டியுள்ளன.

கடந்த ஆண்டில் மாத்திரம் அரபுநாடுகள் உணவு இறக்குமதிக்கு இரண்டாயிரத்து ஐநூறு கோடி டாலரை செலவு செய்துள்ளன. (ஒ)

## ஒப்பந்தம் மீறி சண்டை

பெய்ரூட், நவ 30

லெபனானில் ஷியா அமல் மக்கள் படையினருக்கும் பாலஸ்தீனியர்களுக்குமிடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டபோதும் கூட பலத்த மோதல் நடக்கிறது.

சேதம்பற்றிய தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

குடியிருப்புகள் மீது குண்டுவீச டாங்குகளும், மோட்டர் பீரங்கிகளும் இயந்திரத் துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர் முக்கியத்துவம் வாய்ந்த மலைக்கிராமம் ஒன்றைக் கைப்பற்ற சிடான் அருகே தீவிரமாக சண்டை நடப்பதாகக் கூறப்படுகின்றது. (ஒ)

## வெளி உலகில்

### ஐ நா சபை வங்குரோத்தில்

வாஷிங்டன், நவ, 30

ஐக்கிநாடுகள் ஸ்தாபனம் வங்குரோத்து நிலையில் இருப்பதாகவும் 1987 ம் ஆண்டில் ஒருவாரம் மட்டுமே செயல்படுவதற்கு அதன் வசம் நிதியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஐ. நா தலைமைச் செயலர் பெரஸ் டி கியூலர் தெரிவித்தார்.

ஐ நா. வின் பட்ஜட்டில் 25 வீதம் நிதியையே வழங்கிவரும் அமெரிக்காதான் இந்த நிதித் தட்டுப்பாட்டுக்குக் காரணமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

### ஆஸ்திரியா நன்கொடை

வியன்னா, நவ 30

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானிகள் பயன்படுத்துவதற்கான முக்கிய பயிற்சி நிலையத்திற்கு 7 லட்சம் 50 ஆயிரம் டாலரை ஆஸ்திரியா வழங்கியுள்ளது.

உணவு விவசாய ஸ்தாபனம் இதனைத் தெரிவித்தது

விஞ்ஞான முன்னேற்றத்தை விவசாய நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது தொடர்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஆஸ்திரியாவில் உள்ள இந்த ஆய்வு நிலையத்தைப் பயன்படுத்தும். (ஒ)

### விமான நிலைய தடை நீக்கம்

சென்னை, நவ 30

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உள்நாட்டு சர்வதேச பயண முனைகளுக்கு வெளிநாட்டவர்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 22 ஆம் திகதி பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (ஒ)

### அபிப்பிராய வாக்கெடுப்பு

மணிலா, நவ. 30

பிலிப்பீன்ஸின் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு வரும் பெப்ரவரி மாதம் நடைபெறும். (ஒ)

### நிவாரண உதவி

ஜெனீவா, நவ.30

உணவு விவசாய ஸ்தாபனம் ஒரு கோடியே முப்பத்தைந்து லட்சம் டாலர் நிவாரண உதவியை ஆப்கான், இந்தோசீனா, சூடான் ஆகிய நாடுகளுக்கு வழங்கவுள்ளது.

இந்த நாடுகளில் யுத்தத்தால் பாதிப்படைந்த அகதிகளுக்கு நிவாரண உதவியாக இத்தொகை வழங்கப்படும். (ஒ)

# இலங்கை மற்றொரு லெபனானாக மாறும்

## இதனைத் தடுக்க இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு தேவை என்கிறார் சிவா

வாஷிங்டன், நவ.30

இலங்கை மற்றொரு லெபனான் ஆக மாறும் முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படி இலங்கை அரசை நிர்ப்பந்தியுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் அமெரிக்க காங்கிரஸ், மனித உரிமை இயக்கப் பிரதிநிதிகளுக்கு மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கைத் தமிழரின் அசைக்கமுடியாத நிலைப்பாடு தமிழ்மொழி மாநிலமே என்றும் அவர்களுக்கு திரு. சிவசிதம்பரம் வலியுறுத்திச் சொன்னார்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தற்சமயம் வாஷிங்டனில் தங்கியிருக்கிறார்.

அங்கு அவர் இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைபற்றியும், இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் தமிழரின் நிலைப்பாடு என்ன என்பது பற்றியும் அமெரிக்க அரசு அதிகாரிகளுக்கு விளக்கி வருகிறார்.


கடந்த புதன்கிழமை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள், மனித உரிமை ஸ்தாபனப் பிரமுகர்கள், சர்வதேச மன்னிப்புச்சபைப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கை இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் முக்கிய சட்டத்தை அடைந்துள்ளன என்று திரு சிவசிதம்பரம் அவர்களிடம் தெரிவித்தார்.

''தமிழ்மொழி மாநிலமே இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைப்பாடு. இதில் விட்டுக் கொடுக்கமாட்டோம். தமிழரின் அபிலாஷைகளை ஓரளவாவது தமிழ்மொழி மாநில அமைப்பே பூர்த்தி செய்யும்.

''லெபனான் நிலைமை இலங்கையில் ஏற்படாமல் தடுக்க இனப்பிரச்சினைக்கு தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வைக் காணும்படி இலங்கை அரசை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள், சர்வதேச மனித உரிமை இயக்கங்கள் நிர்ப்பந்திக்க வேண்டும்''-

இப்படி திரு சிவசிதம்பரம் காங்கிரஸ் உறுப்பினர்கள், மனித உரிமை இயக்கப் பிரதிநிதிகளை நேரிற் சந்தித்து வலியுறுத்தினார். (இ-ஐ-எ)



**பொய்யாமொழி**

குறள்:

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்

பொருள்:

அறமாகிய செயல் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமையாகும்; கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.

# நன்றிமறவாத தமிழினம் நாவலரை வணங்குகிறது

## இணுவில் விழாவில் உரை

சுன்னாகம், டிச. 1

நாவலர் பெருமான் ஒருபோதும் தன்னை வணங்குமாறு எவரையும் பணித்ததில்லை. ஆனால் நன்றி மறவாத தமிழினம், அவர் செய்த பணிகளைப் போற்றி அவரை வணங்குகிறது.

வலி - தெற்கு உதவி அரச அதிபர் திரு ஆ. மகாலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ். சோதிப் பெருமாள் தலைமையில் இணுவிலில் நடைபெற்ற நாவலர் விழாவில் திரு ஆ. மகாலிங்கம் உரையாற்றினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் நாவலர் பெருமான் சைவத்துக்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிய உயர்ந்ததொண்டுகளை இன்றைய தலைமுறையினருக்கும் புரியும்படி ஆசிரியர்கள் சிறப்பான சேவை செய்ய வேண்டும்.

பாடப்புத்தகங்களிலும், சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் அவரது தொண்டுகள் பற்றி நிறைய எழுதவேண்டும் அப்போதுதான் நாவலரின் பணியை நாடறியச் செய்த நன்றியுள்ள தமிழ் இனம் தமிழ் மண்ணில் உருவாகும் என்றார்.

திரு. சோதிப்பெருமாள் தமது தலைமையுரையில், நாவலரின் நற்பண்புகள் பற்றி மேடைகளில் நாம் பேசினால் மாத்திரம் நாம் நாவலருக்கு நன்றியுடையவர்களாக மாட்டோம்.

அவர் போதித்ததுக்கு அமைய செயற்படவும் வேண்டும் என்றார்.

அகில இலங்கை இந்து இளைஞர் சங்க செயலாளர் திரு. எஸ் சண்முகலிங்கம், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி. சோமசுந்தரம், பண்டிதர் சி. திருநாவுக்கரசு உட்பட பலர் நாவலர் பெருமையைப் பேசினர். (இ-27)

### பனை தென்னந் தோட்ட உரிமையாளர்

# ஏழை மக்கள் நலனிலும் அக்கறை காட்ட வேண்டும்

## போஷாக்கு கருத்தரங்கில் உரை

கிளிநொச்சி. டிச, 1

பனை தென்னந்தோட்ட உரிமையாளர்கள் தோட்டங்களிலும் சுற்றியும் வாழும் ஏழை மக்களின் நலனில் அக்கறை செலுத்தவேண்டும்.

முகாவில் கிராமோதய சபையின் முயற்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட போஷாக்குத் தொடர்பான கருத்தரங்கில் பேசிய கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் ஸ்ரீ சுவாமிநாதன் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

முகாவில் அ.த.க பாடசாலையில் உணவுப் போஷாக்குக் குழுத்தலைவர் மு. சின்னத்தம்பி தலைமையில் 'போஷாக்கு நிலையைப் பேணுவோம்' எனும் தலைப்பில் இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் சிரேஷ்ட திட்டமிடல் பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில்:-

பனைப் பிரதேசத்திலிருந்து பெருவாரி நன்மைகளைப் பெற்றுவந்துள்ள தோட்ட உரிமையாளர்கள் பனைக் கிராமங்களின் முன்னேற்றத்திற்கு எதையாவது செய்தார்களா? என்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் நிதியூற்றுக்கள் வற்றியுள்ள இப்பிரதேசங்களில் வசதியுள்ளவர்கள் மனம் மாறி பொதுச் சேவைகளில் குறிப்பாக போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர், வீட்டுவசதி என்பவற்றில் சிறிதளவாவது முதலீடு செய்யாவிட்டால் அவர்களது பெருமுதலையும் கைவிட வேண்டிவரும்.

இப்படி அவர் கூறினார்.

பனை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கந்தசாமி பேசும்போது பனை மக்கள் அன்பும் பண்பும் முயற்சியும் நிறைந்தவர்கள். அவர்கள் பலதுறையிலும் வாய்ப்புக்களைப் பெறவேண்டிய நிலையில் உள்ளார்கள் என்றார்.

இயக்கச்சி அ. த. க. பாடசாலை அதிபர் ப. அரியரத்தினமும் பேசினார்.

முகாவில் விசேட சேவை உத்தியோகத்தர் திரு. பத்மநாதன் ஒழுங்கு செய்திருந்த இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட சகலருக்கும் இலக்கஞ்சி வழங்கப்பட்டது. (இ-76)

### சிலிண்டர் கண்ணிவெடி மீட்பு

மட்டக்களப்பு, டிச. 1

மட்டக்களப்பு வெல்லாவெளி என்னுமிடத்தில் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் கண்ணிவெடியை ஆயுதப் படையினர் மீட்டனர்

பக்கிஎல்ல என்ற இடத்தில் இந்தக்கண்ணிவெடி வைக்கப்பட்டு இருந்தது.

அந்த வழியாக தான் படையினர் தண்ணீர் கொண்டுவரச் செல்வது வழக்கம். (இ-எ-21)

### ஜி சி .ஈ. பரீட்சை

# எஞ்சியவினாத்தாள்களை உடன் அனுப்ப வேண்டும்

பலாலி, டிச. 1

இவ்வருடம் நடைபெறவுள்ள க. பொ. த. பரீட்சையின் எஞ்சிய வினாத்தாள்கள் உடனுக்குடன் அந்தந்த நாளே விடைத் தாள்களுடன் இணைப்பதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்

இதற்கான உத்தரவு சகல மேற்பார்வையாளர்களுக்கும் பரீட்சை ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் பரீட்சை முற்றாக முடிந்தபின்பே வினாத்தாளினைப் பொதிசெய்து அனுப்பும்முறை இருந்தது.

பரீட்சையின்போது தவறான நடைமுறைகள் கையாளப்படுவதைத் தவிர்க்கவே புதியமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-119)

### மாணவர் கருத்தரங்கு

மானிப்பாய், டிச 1

புகைத்தல், போதை வஸ்துக்கள் உபயோகித்தல் ஆகியவற்றின் தாக்கம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. (உ-90)

### அடுத்த ஆண்டு முதல்

# பாடசாலைகள் நான்கு பிரிவுகளில்

மானிப்பாய், டிச. 1

1987ம் ஆண்டு முதல் பாடசாலைகள் சீரமைக்கப்படவுள்ளன. பாடசாலைகள் யாவும் நான்கு பிரிவுகளுக்குள் கொண்டு வரப்படும்.

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்துவரையுள்ள வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் ஆரம்ப பாடசாலைகள் எனவும்—

ஆண்டு ஒன்றிலிருந்து ஆண்டு 8 வரையுள்ள வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலைகள் எனவும்—

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 11 வரையுள்ள பாடசாலைகள் இடைநிலைப் பாடசாலைகள் எனவும்—

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 13வரை அல்லது ஆண்டு 6முதல் ஆண்டு 13 வரையுள்ள பாடசாலைகள் கல்லூரிகள் எனவும் பிரிக்கப்படவுள்ளன—

இவ் வேற்பாடுகளின்படி தற்போது ஆண்டு ஒன்று முதல் ஆறு வரையுள்ள பாடசாலைகள் பல 1987ம் ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றிலிருந்து ஆண்டு 5வரை (4ம் வகுப்பு வரை) மட்டுமே வகுப்புக்கள் நடத்த அனுமதிக்கப்படும்.

மானிப்பாய் கல்வி வட்டாரத்தில் தற்போது ஆண்டு 1 முதல் 6 வரை வகுப்புக்களை கொண்டிருக்கும் 27 பாடசாலைகள் அடுத்த ஆண்டிலிருந்து ஆண்டு 1 முதல் 5 வரையுமே வகுப்புக்களைக் கொண்டிருக்கும் எனத் தெரியவருகிறது. (உ-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (O/L) 87, 88
திறமை வாய்ந்த ஆசிரியர் குழு
விஞ்ஞானம்: திரு. இ. செல்வவடிவேல்
கணிதம்: ,, V. T. இராசேந்திரா
ஆங்கிலம்: ,, K. M. செல்வரத்தினம்
தமிழ்: ,, த. அம்பிகைபாகன்
வர்த்தகம். சமூகக்கல்வி: ,, S. திருக்குமார்
புதிய வகுப்புகள்: 06-12-86 பி. ப. 3 மணி
புதிய கல்வி நிலையம்
17/1, ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

# உதயன்

01. 12. 1986 திங்கட்கிழமை

மாணவர்களுக்கோர் வரப்பிரசாதம்!
பாதுகாப்பான சூழலில்
(டாக். கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக)
New Education Centre
17/1, ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம்
G. C. E. (O/L) 87, 88
ஆண்டு 9, 8, 7, 6, 5, 4 க்கான
சகல பாடங்களும் யாழ் முன்னணி
ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.
ஆரம்பம்: 06-12-86 சனி பி. ப 3 மணி

## 47 தமிழர்களின் மறைவுக்கு காரணமான

# புல்லுமலை படுகொலைகள் பற்றி உயர்மட்ட விசாரணை

## இராணுவ முகாமில் நடக்கும்

மட்டக்களப்பு, டிச. 1

கடந்த மாதம் 10 ஆம் திகதி புல்லுமலையில் 47 தமிழர்களின் மறைவுக்கு காரணமாகவிருந்த இராணுவத்தினர் வெறியாட்டம் குறித்து எதிர்வரும் புதன்கிழமை அம்பாறை இராணுவ முகாமில் உயர்மட்ட விசாரணை ஒன்று நடைபெறவிருக்கிறது.

இவ் விசாரணையில் கலந்து கொள்ளும்படி மட்டக்களப்பு பிரசைகள் குழு அழைக்கப்பட்டுள்ளது.

குழுவின் உபதலைவர் வண பிதா சந்திரா பெர்ணண்டோ, செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து ஆகியோர் விசாரணையில் கலந்து கொள்வதற்காக அம்பாறை இராணுவ முகாம் செல்வர்.

சாட்சிகளின் பாதுகாப்புக் கருதி விசாரணையை மட்டக்களப்பில் நடத்தும்படி கோருவது என்று மட்டக்களப்புப் பிரசைகள் குழு நேற்றுக் கூடி முடிவு செய்தது.

புல்லுமலைச் சம்பவத்தில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 25 பொது மக்கள் உயிரிழந்தனர். 22 தமிழர் பற்றித் தகவல் ஏதும் இல்லை.

இச்சம்பவம் பற்றி மட்டக்களப்புப் பிரசைகள் குழு கூட்டுப்படைத் தளபதி, ஜனாதிபதி ஆகியோருக்கு முறையிட்டதைத் தொடர்ந்தே, இந்த உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றிய பூர்வாங்க விசாரணைகள் பொலீஸாரால் நடத்தப்பட்டன. (உ-எ-21)

## விளக்கம்

யாழ்ப்பாணம், டிச. 1

பல்கலைக்கழக மாணவர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதற்கான காரணங்களை விளக்கி மாணவர் அமைப்புக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (உ)

## தீர்வு வரும் என்று ஜே. ஆர். நம்பிக்கை

கொழும்பு, டிச. 1

இனப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வரலாம் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நேற்று நடந்த கலாமான்ய விருதுகள் பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இந்த நம்பிக்கையைத் தெரிவித்தார்.

இப்போது வடக்கு - கிழக்கில் பயங்கரவாதம் நடக்கிறது. அதனால் நாட்டில் மக்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன —

அதனைத் தவிர்த்து நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் முயன்று வருகிறது—

இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கக் கூடிய சாதகமான சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன—

நான் தனியாக நின்று பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. மக்களின் ஒத்துழைப்பும் தேவை. கஷ்டமான காலங்களில் அரசுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறார்கள், —

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார் (அ)

பிரயாண ஒழுங்குகள்
✶ சவூதி அரேபியா ✶ சிங்கப்பூர்
✶ குவைத் ✶ ஜேர்மனி ✶ லண்டன் U.K.
1. சவூதி அரேபியாவுக்கு (Open Visa)
தொழில் வாய்ப்புடன் உடனடி பிரயாணம் மேற்கொள்ள விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
2. சிங்கப்பூர்
தொழில் வாய்ப்புடன் செல்லவிரும்பும் ஆண்களும் பெண்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.
3. குவைத்
குவைத் டிறைவிங் லைசென்ஸ் உள்ளவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
4. ஜேர்மனி - லண்டன்
செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.
(குறிப்பிட்ட வெற்றிடங்கள் மட்டும் உண்டு)
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
TRI STAR TRAVELS
றை ஸ்ரார் றவல்ஸ்
No. 6, நவீன சந்தை மேல்மாடி.
தொலைபேசி இல: 23831
மு.கு: யாழ்நகர் நிலைமை சீரற்று, எமது அலுவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ் வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.
71, குருசோ வீதி, (சுண்டுக்குளி) யாழ்ப்பாணம்.
வே. குகராஜா, மயிலியதீபுலம் கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
N. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.

## கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்ற

# போட்டிப் பரீட்சை மூலம் ஆங்கில ஆசிரிய நியமனம்

## விண்ணப்ப முடிவு நாள் வெள்ளிக்கிழமை

கொழும்பு, டிச. 1

கல்விச் சேவைக் குழு கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களைப் போட்டிப் பரீட்சை மூலம் நிரப்ப முடிவு செய்திருக்கிறது.

இந் நியமனங்களுக்கான விண்ணப்பங்களை கல்விச் சேவைக் குழு கோரியிருக்கிறது.

விண்ணப்ப முடிவுநாள் இம்மாதம் 5 ஆம் திகதியாகும்.

தமிழ் விண்ணப்பதாரிகளுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் கஷ்டப் பிரதேசங்களாகக் கணிக்கப்படும்.

வடக்கு, கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலும் ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

18 தொடக்கம் 28 வயதுடையவர்கள் இந் நியமனங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தாய்மொழி, கணிதம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவர்.

பரீட்சையில் தேறுவோருக்குப் பயிற்சியளிக்கப்படும். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் இப் பயிற்சியின் பின்னர் தகுதிகாண் பரீட்சை ஒன்று நடத்தப்படும்.

அப் பரீட்சையிலும் சித்தியடைவோரே ஆசிரியர்களாக நியமனம் பெறுவர். இவர்கள் நியமிக்கப்படும் கஷ்டப் பிரதேசத்தில் 3 வருட காலம் கட்டாய சேவை புரியவேண்டியிருக்கும். (உ-21)

### பிரதான—

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

காரணமாக அங்கு தொடர்ந்து கடமை செய்ய முடியாது என ஊழியர்கள் தெரிவித்ததை அடுத்தே அனைத்து கருமபீடங்களும் இரண்டாம் குறுக்குத் தெருவுக்கு மாற்றப்பட்டன. (உ-10)

### இந்தியா எதிர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

கிழக்கு மாகாணத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்று மாகாணங்களின் எல்லைகள் சம்பந்தப்பட்ட விளக்கத்தையே தூதர் பெர்னாட் திலகரத்தின புதுடில்லி எடுத்துச் சென்றிருந்தார். (அ-எ)

### ஆயிரக்கணக்.,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தேங்கியுள்ளன.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்காத தனியார் பரீட்சார்த்திகள் இன்றும் நாளையும் நாளை மறுதினம் புதன் கிழமையும் கல்வித் திணைக்களத்துக்கு நேரடியாகச் சென்று தமது அடையாள அட்டைகளைக் காட்டி அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-5)

### சிங்களக் குடி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை அடுத்து நிகழ்ந்த நேரடி மோதலின் இறுதியில் இராணுவப்படை பின்வாங்கியது.

இத்தாக்குதல் சிங்கள குடியேற்றமான 2 ஆம் கொலனிக்கும் 3 ஆம் கொலனிக்கும் இடையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### சிலர் விடுதலை

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதி தேடுதல் வேட்டையின் போது கைது செய்யப்பட்டோரில் சிலர் வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையானோர் விவரம் வருமாறு:

மாணிக்கராசா ஜெயராசா, சோமசுந்தரம் ராஜரத்தினம், மயில்வாகனம் வெற்றிவேல், மாணிக்கம் மாசிலாமணி, செல்லத்துரை கந்தராசா, தம்பன் சிவஞானம், செல்லையா உதயகுமார், கணபதிப்பிள்ளை மார்க்கண்டு, சிவஞானம் சிவபாலச்சந்திரன், துரையப்பா செல்வரத்தினம், சின்னத்தம்பி பரமானந்தன், முத்துசாமி நடராசா, பெருமாள் கருப்பையா, யோசப் ராசேந்திரம், நாகலிங்கம் வீரவாகு, கந்தன் வரதலிங்கம், வல்லிபுரம் விஜயானந்தம், முத்தையா வில்வராசா, ஐயாத்துரை கருணாகரன், மாணிக்க முத்து புண்ணியராசா, கதிரவேலுப்பிள்ளை சுந்தரலிங்கம், பெரியண்ணன் முருகேசு. இவர்களனைவரும் குமுழமுனையைச் சேர்ந்தவர்கள்.

### இந்தியாவினது---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த இணை அமைச்சர் குழு சென்னை செல்லும்.

அப்பேச்சுக்களில் தமிழ்ப் போராளிகள் எடுக்கும் நிலைப்பாட்டைத் தொடர்ந்தே இணை அமைச்சர் குழுவின் கொழும்பு விஜயத்துக்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

— இப்படி திரு. டிக்ஸிற் ஜனாதிபதிக்கு தெரிவித்தார். (அ-எ)

### இந்தியா தனது--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிக்ஸிற் தெரிவித்தார்,

"இந்திய அரசின் யோசனைகளை இலங்கை அரசு நிராகரித்தது"—என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று வெளியிட்ட செய்தி பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்தியத் தூதர் மேற்கண்ட வியாக்கியானத்தை அளித்தார்.

இந்தியா, இனப் பிரச்சினைத் தீர்வில் மத்தியஸ்தம் மட்டுமே வகிக்கின்றது. சொந்தமாக யோசனைகள் எவற்றையும் வைக்கவில்லை.

(India is only transmitting and interpretting the aspirations of Tamil people to the Sri Lankan Government.)

தமிழரின் அபிலாஷைகளை இலங்கை அரசுக்குத் தெரியப் படுத்துவதையும் விளக்குவதையும் தான் இந்தியா செய்து வருகிறது.

இப்படி திரு. டிக்ஸிற் தெரிவித்தார். (அ - எ)

### பாலத்தை—

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கள் நேரடி மோதலின் போது இப்பாலம் தகர்க்கப்பட்டது.

மன்னார் மக்கள் வங்கிக் கட்டடத்தில் நிலை கொண்டிருக்கும் சிப்பாய்கள் இந்தப் பாலத்தைத் திருத்தி அமைப்பதற்காக கட்டடப் பொருள்களையும் அப் பகுதியில் இறக்கி வருவதாகத் தெரிய வருகிறது. (உ-10)



ரெட்ஸ்டார்
வீடெம்
600 சக 400
(எம். சீ. பீ. ஏ 60% சக 40%)
ரெட் ஸ்டார் வீடெம் 600 சக 400 நெற்பயிருடன் போட்டியிட்டு வளரும் அகன்ற இலைகளாகிய கிடச்சி, புளியாரி, நீர்கோவா ஆகியவற்றையும் சிறுகோரை, சந்தணகோரை, பன் ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும். நெல் விதைத்து 21 நாட்களுக்கும் 42 நாட்களுக்கு மிடையில் தெளித்தால் சிறந்த பலனடையலாம்.
வீடெம் 400 ரூ 41/50ம் அதற்குமேலும்
வீடெம் 600 ரூ 19/50ம் அதற்குமேலும்
எச்சரிக்கை!- எல்லா பீடை நாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.
அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு.

## 31-ம் நாள் நினைவாஞ்சலி



### பிலிப்பையா எற்வேட்

படைப்பு: 20 - 3 - 1953

அழிப்பு: 1 - 11 - 1986

அன்பா!

உனதன்பான பேச்சினாலும் மன்னிக்கும் மனப்பான்மையாலும் உன் பகைவனையும் நண்பனாக்கினாய் இன்று எம்மையெல்லாம் தவிக்கவிட்டுப் பரலோகம்சென்றுவிட்டாயே. இயேசு சிலுவையில் தொங்கி ஆவிபிரியும் போதும் தன்னை அடித்து வதைப்படுத்தியவர்களை மன்னித்ததுபோல் நீயும் உன் ஆவி பிரியும்போதும் உன்னைக் காட்டிக்கொடுத்தவர்களையும் காயப்படுத்தியவர்களையும் மன்னித்து மன்றாடினாயா? எங்களுடன் வாழும் போதும் உன் எதிரிகளையும் மன்னித்தாய். உங்கள் எதிரிகளையும் மன்னிக்க வேண்டுமென்று எங்களுக்குப் பாடம் புகட்டினாயே அண்ணா. யாருக்கண்ணா வரும் இந்த உன்னதக் குணம்.

நீ பொதுப்பணியில் ஈடுபட்டு வறியவர்கள் வாழ்க்கையிலே முன்னேற வேண்டுமென்று உழைத்ததினை பொறுக்க முடியாத சிலர் மாற்றானின் தப்பபிப்பிராயத்திற்கு உன்னை ஆளாக்கினர், ஆனால் நன்றியுள்ளவர்கள் எவரும் மறக்கமாட்டார்களண்ணா. இறைமகன் யேசுவைப்போல் நீயும் உனது முப்பத்திமூன்றாவது வயதிலே சாகடிக்கப்பட்டாய்.

உன் உயிர் நண்பர்கள் உன்னை மறக்க முடியாது தவிக்கின்றார்கள். உன் உடன் பிறப்புக்கள் நீ உயிருடன் வருவாயென்றெண்ணி தங்களுக்குக் கிடைத்த ஏமாற்றத்தினையும் உன் உடல் பட்டிருந்த வாதைகளையும் உனக்கு நடந்த கொடுமைகளையும் நினைத்துப் பதறுகிறார்கள். உன்னைப் பெற்றவர்கள் உன் பிறப்பினைப் பெரும் பேறாக எண்ணியவர்கள் இறைவன் தமக்களித்த பொற்கிழியை இழந்துவிட்டதாகத் துடிக்கின்றார்கள். உன் மனைவியும் மகனும் யாருக்குமே எந்த ஜென்மத்திலேயும் கிடைக்க முடியாத உன்னை இழந்து உன் மதிமுக இழப்பைத் தாங்கமுடியாது தள்ளாடுகிறார்கள். உன் அடைக்கலத்திலே வாழ்ந்த உறவினர் தாம் அனாதைகள் ஆக்கப்பட்டு விட்டதாக ஆதங்கப்பட்டு அழுகிறார்கள். உன் உதவியைப் பெற்ற அகதிகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் உனக்காகப் புலம்புகிறார்கள்.

உனது இலட்சியம் நிறைவேறவும் நீ இறை யேசுவுடனும் அவர் திருத்தாயாருடனும் நித்திய பேரின்பத்திலிருக்க வேண்டுகின்றோம்.

பாஷையூர்.

இவர் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்,
மனைவி, மகன்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 01-12-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second lane Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86. T'PhoneNo. 24805, 22073.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org